From-39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 44 /2021

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Malayalam | Father/Husband Name | : Chinnakaruppan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 16.03.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

முதல் விசாரணை:

நான் அ.வல்லாளபட்டியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகைள தெரியும். சுமார் 1 வருடத்திற்கு முன்பாக ஒருநாள் இரவு சுமார் 08.30 மணியளவில் நாங்கள் எங்கள் வீட்டில் எங்கள் குடும்பம் விசயமாக பேசிக்கொண்டிருந்தபோது எதிரி சிலம்பன் கையால் என்னை அடித்தும் அவரது மகன் ரவி என்பவர் கம்பால் எனது கையிலும் காலிலும் அடித்தார். எதிரி மீனா என்பவர் செருப்பை எடுத்து என்மீது எறிந்தார். என் மகள் நிரஞ்சனா, வெள்ளையம்மாள், இன்னொரு பெண்ணும் விலக்கிவிட்டார்கள். பின்னர் என்னை மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். நான் மருத்துவமனையிலிருந்தபோது 11ம் தேதி போலீசார் என்னை விசாரித்தனர். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகாரை கிடாரிப்பட்டியை சேர்ந்த முருகன் என்பவரிடம் நான் சொல்ல சொல்ல அவர் எழுதி படித்துக்காண்பித்து பின்னர் நான் கையெழுத்து செய்து போலீசாரிடம் கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். நான் 8 நாட்கள் உள்நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

நான் படித்துள்ளேனா என்றால் இல்லை. புகார் நான் காவல் நிலையம் சென்று கொடுத்தேனா என்றால் மருத்துவமனையில் என்னிடம் வந்து பெற்றார்கள். 1ம் எதிரி சிலம்பன் ஊர்க்குடும்பனர் என்றால் இல்லை. நான் தினந்தோறும் மது அருந்தும் பழக்கம் உள்ளவன் என்றால் வேலைக்கு

செல்லும் நாட்களில் மது அருந்துவேன். பொதுவாக நான் மது அருந்திவிட்டு வந்து எங்கள் பகுதியில் சண்டைபோடும் உள்ளவர் என்றால் இல்லை. 1வது எதிரியின் தம்பி மச்சக்காளை நெல் மூட்டைகளை காணோம் என்று புகார் கொடுதிருந்தாரா என்றால் அதுபற்றி தெரியாது. அந்த புகாரை திரும்ப பெறச்சொல்லி 1வது எதிரியிடம் பலமுறை நான் தகராறு செய்தேன் என்றால் இல்லை. மேலவளவு காவல் நிலைய குற்ற எண். 1117-20 என்று குற்ற வழக்கு என் உறவினர் மணிகண்டன் என்பவர்மீது நெல் மூட்டைகளை காணோம் என்று வழக்கு பதியப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தின்போது யார் யார் உடனிருந்தார்கள் என்றால் நான் மயக்கமாகி இருந்தேன் அதனால் தெரியாது. மருத்துவமனையில் யார் என்னிடம் வந்து புகார் பெற்றது என்றால் ஆறுமுகம் என்ற ஏட்டையா புகார் பெற்றுச்சென்றார். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. போலீசார் எந்த தினத்தில் என்னிடம் புகார் வாங்கினார் என்றால் சம்பவம் நடந்த மாதத்தில் 11ம் தேதி. நான் சொன்ன தேதியில் எதிரி என்னை தாக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பிரச்சனை செய்வதையே வழக்கமாக கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள்மீது எனக்கு நெல்மூட்டைகள் காணாமல்போனது விவகாரத்தில் ஊர்குடும்பனார் பொறுப்பு சம்மந்தமாக முன்விரோதம் இருந்ததால் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 44 /2021

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : Niranjana | Father/Husband Name | : Vinoth |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 16.03.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

முதல் விசாரணை:

நான் அ.வல்லாளபட்டியில் என் அப்பா வீட்டில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1 என் அப்பா. ஆஜர் எதிரிகளை தெரியும். 2020ம் வருடம் தீபாபளி மாதத்தில் 8ம் தேதி இரவு சுமார் 8 முதல் 8.30 மணியளவில் எங்கள் வீட்டின் முன்பாக என் அப்பா என் அம்மாவிடம் பேசி சண்டைபோட்டுக்கொண்டிருந்தார். அதை எதிரிகள் அவர்களைப்பற்றி பேசுவதாக நினைத்து எங்கள் வீட்டிற்கு வந்து சிலம்பனும் ரவியம் கம்பை வைத்து என் அப்பாவை அடித்தும், மீனா செருப்பை வைத்து என் அப்பாவை அடித்தார். நாங்கள் என் அப்பாவை இழுத்து விலக்கிவிட்டுக்கொண்டிருந்தோம். என் அப்பா மயக்கமாகிவிட்டதால் ஆம்புலன்ஸ் வரவழைத்து மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். நான் 2 நாட்கள் என் அப்பாவுடன் இருந்துவிட்டு தஞ்சாவூருக்கு சென்றுவிட்டேன். என் அப்பா எப்பொழுது டிஸ்சார்ஜ் ஆனார் என்ற விவரம் தெரியாது. போலீசார் என்னை 11ம் தேதி விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சம்பவத்தின்போது நான் எங்கு குடியிருந்தேன் என்றால் என் அப்பா வீட்டில். சம்பவத்தின்போது நான் தஞ்சாவூரில் இருந்தேன் என்றால் இல்லை, நான் தீபாவளி சமயத்தில் என் அப்பா வீட்டில் இருந்தேன். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும். எதிரிகளுக்கும் எங்களுக்கும் ஏற்கனவே முன்விரோதம் உள்ளது என்றால் சரியல்ல. போலீசில் யார் புகார் மனு கொடுத்தது என்றால் என் அப்பா. சம்பவம் நடந்த இடத்திற்கும் என் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் அரை கி.மீ. அரை கிலோமீட்டர் தூரத்தை கால் மணி நேரம் நடந்தால்தான்

கடக்கமுடியும் என்றால் சரிதான். சம்பவம் எப்பொழுது நடந்தது என்றால் இரவு 8 மணி. சம்பவம் நடந்தபோது நான் என் வீட்டில் சமைத்துக்கொண்டிருந்தேன். சாட்சி மீண்டும் சம்பவ இடம் என் வீட்டு முன்பாக என்று சொல்கிறார். புகார் கொடுத்த பின்பு மருத்துவமனை சென்றோமா என்றால் 108 ஆம்புலன்சில் மருத்துவமனை சென்றோம். நான் என் அப்பாவுடன் ஆம்புலன்சில் வந்தேன் என்றால் சரிதான். புகார் மனுவை யார் எழுதியது என்றால் எங்களுடன் வந்த கிடாரிப்பட்டியை சேர்ந்த முருகன் என்பவர் எழுதினார். எங்கு வைத்து எழுதினோம் என்றால் ஆஸ்பத்திரியில் வைத்து போலீசார் என்னை விசாரித்தனரா என்றால் விசாரித்தனர், விசாரணை அதிகாரி யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. எங்களுடன் யார் ஆம்புலன்சில் வந்தது என்றால் என் தம்பி ஆனந்த். என் தம்பி ஆனந்த் எங்கு வேலை செய்கிறார் என்றால் டெல்லியில் வேலை செய்கிறார். சம்பவத்தன்று அவர் லீவில் இங்கு வந்திருந்தார். நான் சொல்வதுபோல் சொன்ன இடத்தில், நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், புகார்தாரர் என் தகப்பனார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 44 /2021

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : Vellayammal | Father/Husband Name | : Chinnaiah |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 16.03.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

முதல் விசாரணை:

நான் அ.வல்லாளபட்டியில் வசிக்கிறேன். வீட்டுக்குடித்தனம் செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். 1-வது எதிரி என் மாமனார், (என் கணவரின் பெரியப்பா) மீனா எனது நாத்தனார், ரவி எனது மைத்துனர். இந்த ஆண்டு தீபாவளிக்கு ஊருக்கு வரவில்லை, செங்கல்பட்டில் வசித்து வருகிறேன். கடந்த வருடம் தீபாவளிக்கு 10 நாட்களுக்கு முன்பாக நான் செங்கபல்பட்டு சென்றுவிட்டேன். எனவே சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி 161 குவிமுச பிரிவில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதால் அனுமதிக்கப்படுகிறது. )

குறுக்கு விசாரணை :அரசுதரப்பில்

போலீசார் விசாரணையில் கடந்த 08.10.20ம் தேதி இரவு 08.30 மணியளவில் எனது வீட்டின் அருகில் குடியிருந்து வரும் அ.சா.1க்கும் எனது பெரிய மாமனார் சிலம்பன் என்பவருக்கு மச்சக்காளையின் நெல்மூடைகள் திருடுபோனது சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்ததன் தொடர்ச்சியாக மேற்சொன்ன தேதியில் எதிரி சிலம்பன், மீனா மற்றும் ரவி ஆகியோர்கள் அ.சா.1ஐ கெட்டவார்த்தைகளால் பேசியபோது வெளியே வந்து ஏன் இப்படி பேசுகிறாய் என்று கேட்ட அ.சா.1ஐ 1-வது எதிரி கையால் அடித்தும், 2-வது எதிரி ரவி கட்டையால் அடித்தும் இரத்தக்காயப்படுத்தினர். இதை பார்த்த நானும், அ.சா.1-ன் மகள் நிரஞ்சனா, மகன் ஆனந்த் மற்றும் காளியம்மாள் ஆகியோர் சத்தம்போட்டு ஓடிவரவே எதிரிகள் மூவரும் அ.சா.1ஐ பார்த்து கொல்லாமல் விடமாட்டோம் என்று கூறிச்சென்றதாக சொல்லிவிட்டு எதிரிகள்

என் உறவினர்கள் என்பதால் தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு சாதகமாக பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை: (எதிரிகள்தரப்பில்)

அ.சா.1ம் என் உறவினர் என்றால் சரிதான். நடந்த சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 44 /2021

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : Kaiayammal | Father/Husband Name | : llayaperumal |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 16.03.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

முதல் விசாரணை:

நான் அ.வல்லாளபட்டியில் வசிக்கிறேன். வீட்டுக்குடித்தனம் செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும், சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் சண்டை நடந்தபோது என் அப்பா வீட்டிலுள்ள கூலாண்டிபட்டிக்கு சென்றிருந்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி 161 குவிமுச பிரிவில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதால் அனுமதிக்கப்படுகிறது. )

குறுக்கு விசாரணை :அரசுதரப்பில்

போலீசார் விசாரணையில் கடந்த 08.10.20ம் தேதி இரவு 08.30 மணியளவில் எனது வீட்டின் அருகில் குடியிருந்து வரும் அ.சா.1க்கும் சிலம்பன் என்பவருக்கு மச்சக்காளையின் நெல்மூடைகள் திருடுபோனது சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்ததன் தொடர்ச்சியாக மேற்சொன்ன தேதியில் எதிரி சிலம்பன், மீனா மற்றும் ரவி ஆகியோர்கள் அ.சா.1ஐ கெட்டவார்த்தைகளால் பேசியபோது வெளியே வந்து ஏன் இப்படி பேசுகிறாய் என்று கேட்ட அ.சா.1ஐ 1-வது எதிரி கையால் அடித்தும், 2-வது எதிரி ரவி கட்டையால் அடித்தும் இரத்தக்காய்பபடுத்தினர். இதை பார்த்த நானும், அ.சா.1-ன் மகள் நிரஞ்சனா, மகன் ஆனந்த் மற்றும் வெள்ளையம்மாள் ஆகியோர் சத்தம்போட்டு ஓடிவரவே எதிரிகள் மூவரும் அ.சா.1ஐ பார்த்து கொல்லாமல் விடமாட்டோம் என்று கூறிச்சென்றதாக சொல்லிவிட்டு எதிரிகள் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்பதால் தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு சாதகமாக பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை: (எதிரிகள்தரப்பில்)

அ.சா.1ம் என் உறவினா் என்றால் என் பக்கத்து வீட்டுக்காரா். நடந்த சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 44 /2021

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : Palanikumar | Father/Husband Name | : Arumugam |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 16.03.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

முதல் விசாரணை:

நான் அ.வல்லாளபட்டியில் வசிக்கிறேன். சமையல் வேலைக்கு செல்வேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒருநாள் நான் எங்கள் ஊரில் ரோட்டில் ஓரமாக வந்துகொண்டிருந்தபோது போலீசார் வெள்ளை பேப்பரில் என்னிடம் கையெழுத்து கேட்டதன்பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு விசாரிக்க வந்ததற்காக கையெழுத்து கேட்டதாக கூறினார்கள். பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

(சாட்சி 161 குவிமுச பிரிவில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் அரசுதரப்பில் பகுதி பிறழ்சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதால் அனுமதிக்கப்படுகிறது. )

குறுக்கு விசாரணை :அரசுதரப்பில்

போலீசார் விசாரணையில் கடந்த 11.10.20ம் தேதி இரவு 07.30 மணியளவில் நானும் சுப்பிரமணி என்பவரும் சம்பவ இடத்தின் அருகே இருந்தபோது மேலவளவு சார்பு ஆய்வாளர் அங்கு வந்து எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்ை வமகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்து சாட்சியாக கையெழுத்து கேட்டதன்பேரில் கையெழுத்து செய்ததாக சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை:( எதிரிகள்தரப்பில்)

வழக்கு சம்மந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால்

சரிதான். எழுதாத வெள்ளை பேப்பரில்தான் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். என்னிடம் கையெழுத்து கையெழுத்து வாங்கிய அதிகாரியை தெரியுமா ன்றால் தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதால் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 44 /2021

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : Subramani | Father/Husband Name | : Palani |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 16.03.22 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2022.

முதல் விசாரணை:

நான் அ.வல்லாளபட்டியில் வசிக்கிறேன். நான் வீட்டில் ஓய்வு எடுத்துக்கொண்டுள்ளேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து என்னுடையதுதான். இந்த கையெழுத்தை நான் எப்பொழுது போட்டேன் என்று தெரியாது. பார்வை மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ. 3 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர். (சாட்சி 161 குவிமுச பிரிவில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் அரசுதரப்பில் பகுதி பிறழ்சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதால் அனுமதிக்கப்படுகிறது. )

குறுக்கு விசாரணை :அரசுதரப்பில்

போலீசார் விசாரணையில் கடந்த 11.10.20ம் தேதி இரவு 07.30 மணியளவில் நானும் பழுனிக்குமார் என்பவரும் சம்பவ இடத்தின் அருகே இருந்தபோது மேலவளவு சார்பு ஆய்வாளர் அங்கு வந்து எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்து சாட்சியாக கையெழுத்து கேட்டதன்பேரில் கையெழுத்து செய்ததாக சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.